**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன் பி.ஏ., பி.எல்**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27– ம் நாள் திங்கட்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.210/2020</u>**

**<u>CNR.No.TNMY070003862020</u>**

சீர்காழி தாலுக்கா, வைத்தீஸ்வரன் கோவில். கதவு எண்.5/15, கொத்த தெரு, முகவரியில் வசித்து வரும் கணேசன் அவர்கள் குமாரர், சுமார் 44 வயதுள்ள G. பிரபுசீனிவாசன் ..வாதி

**...எதிர்...**

சீர்காழி தாலுக்கா, வைத்தீஸ்வரன் கோவில், கதவு எண்.5/15, கொத்த தெரு, முகவரியில் வசித்து வரும் கணேசன் அவர்கள் குமாரர், சுமார் 49 வயதுள்ள G. செல்வகுமார் ..பிரதிவாதி

இவ்வழக்கானது, வாதியின் அமைதியான அனுபவத்தில் உள்ள தாவா கடைக்கட்டிடத்தினை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ அல்லது முகவர்களோ சட்டப்படி அல்லாமல் (Except Due Process of law) சட்டத்திற்கு புறம்பாக வாதியின், அனுபவத்தில் இடையூறோ, தொந்தரவோ செய்யா வண்ணம் அதனை தடுப்பதற்கான நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 07.11.2020 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 07.11.2020 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் மற்றும் இடம் | 20.01.2002, 20.10.2020, 25.10.2020 ஆகிய தேதிகளில் வைத்தீஸ்வரன்கோவிலில் வழக்கு மூலம் உற்பத்தி |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதியின் சொந்த மதிப்பு ரூ.1000/– என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.30/– நீ.ம.க.ச.பிரிவு 27(c) ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக இன்று 27.10.2025 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி. K. ராதிகா அவர்கள் ஆஜராகியிருந்து, பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.R.

முரளி அவர்கள் ஆஜராகியிருந்தும், இவ்வழக்கானது சிறப்புப்பட்டியலில் போடப்பட்டிருந்தும், வாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரில்லை என்பதால் வாதியின் தவறுகையின் காரணமாக இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்பாணை**

1. வாதியின் தவறுகை காரணமாக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

**சொத்து விபரம்**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை பதிவு மாவட்டம் சீர்காழி சார்பதிவகம், வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி 85, எடக்குடி வடபாதி வட்டம், வைத்தீஸ்வரன்கோவில் கொத்த தெரு மேல் சரகில், நத்தம் ஜாரி ரீ சர்வே எண் 131/3–ல் கொத்த தெருவுக்கு மேற்கு, A.அட்டவணை 1–வது நபர் காலி மனைக்கு கிழக்கு, மு.ராமு காலி மனைக்கு தெற்கு, மலையாளத்தார் மடத்துக்கு வடக்கு இதற்குட்பட்டதில் தென்வடல் இருபுறமும் ஜாதிஅடி 38 கிழமேல் இருபுறமும், ஜாதி அடி 60 அங்குலம் 6–க்கு சதுரடி 2299 உள்ள மனையில் கட்டப்பட்டுள்ள RCC கட்டிடத்தில், கிழமேல் 18 அடியும் தென்வடல் 12 அடியும் கொண்ட மாடி பகுதியில் உள்ள கடை மட்டும்,

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27–ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்றம் முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/– மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**தீர்ப்பாணை:**
அசல் வழக்கு எண். 210/2020
நாள். 27.10.2025.